**பிங்கிரிய பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிங்கிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூலதன உதவி ரூபா 1,000,000 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,186,156 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,548,578 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,813,750 தொகையான நானாவித கடன்கொடுத்தோர் ரூபா 24,353,365 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 326,136 தொகையான முற்கொடுப்பனவு மற்றும் ரூபா 122,927 தொகையான ஆண்டிற்குரிய செலவினம் ஒன்றுக்கொன்று மாற்றி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ரூபா 6,429,375 தொகையான மோட்டார் கேடர் மற்றும் ரூபா 276,000 தொகையான காபேஜ் டேலர் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் ரூபா 182,385 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 8,400 தொகைான வியாபார வரி ரூபா 46,800 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 150,745,629 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 155,745,629 காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 188,936,704 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மீதிகள் மற்றும் உரிய பதிவேடுகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 17,314,853 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

**1.3.4 தொங்கல் கணக்குகள்**

2016 சனவரி 01 இல் திகதியில் உள்ளவாறு ரூபா 1,539,706 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,411,282 ஆன வரவு மீதியொன்றும் காணப்பட்டது.

**1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 58,653,000 தொகையான பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,746,596 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டதுடன் அறவிடும் நடவடிக்கைகள் பலவீனமான ஃநிலைமையில் காணப்பட்டது.

(ஆ) ரூபா 1,407,026 ஆன முற்பண மீதியொன்று 05 ஆண்டுகள் மிகைத்த காலமாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 46,554,,379 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 38,417,376 தொகை 03 ஆண்டுகள் மிகைத்த காலமாக தீர்வு செய்யப்படாமல் இருந்தன.

**1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 122,173,462 பெறுமதியான 07 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள் மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் இணக்க அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவ்விடயங்கள் தொடர்பாக திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,015,363 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,035,048 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 14,980,315 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 17,292,191 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளில் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

ரூபா 92.6 மில்லியனான மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா 89.6 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 29.6 மில்லியன் நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 57 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**2.3.2 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறைந்த கேள்வி ரூபா 655,830 தொகையான 05 இறைச்சிக் கடைகள் மற்றும் தேங்காய் விளைச்சல் காணிகள் 06 வருடக் கணக்காக குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வியாபார உரித்தை குத்தகைக்கு வழங்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 322,118 நிலுவையாக காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கிய 03 சொத்துக்களின் நிலுவை தவனை பாதுகாப்பு பிணைகள் ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும் தாமதத்திற்காக ரூபா 18,514 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை 04 சொத்துக்களுக்காக ரூபா 550,159 ஆன நிலுவை குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 11,500,000 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 12,943,672 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,001,767 கூட்டுத்தொகையான 02 வங்கிக் கணக்குகள செயற்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் இக்கணக்குகள் தொடர்பாக சபையின் பதிவேடுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) PF - 3337 ஆம் இலக்க கெப் வண்டி சபை வளவிலிருந்து வெளியேறுதல் மற்றும் வருகை போன்றவற்றிற்கான விபரங்கள் நாளாந்த வருகை மற்றும் வெளியேறல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான 06 வாகனங்களின் மைலோ மீற்றர் 2016 செப்தம்பர் 05 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு பௌதீக ரீதியாக பரீட்சித்த போது மீற்றர் மற்றும்

ஓட்டப்பதிவேடுகளில் குறிப்பிடபட்டிருந்த தூர அளவுகளுக்கு இடையே 11 கி.மீ முதல் 348 க.மீ. வரையான வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஈ) வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் 181,846 தொகையானஇனங்காணப்படாத வேறுபாடொன்று ஆண்டின் போது சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

காணிகளை கூறுகளாக்கி விற்பனை செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணிகளை கூறாக்கி விற்பனை செய்யும் உப விதியின் பிரகாரம் கூறுகளாக்கிய காணிகளில் உள்ளக வீதி 30 அடிக்குப் பதிலாக 20 ஆடி மற்றும் வெவ்வேறு குறைபாடுகள் காணப்பட்ட காரணத்தினால் காணிகளை கொள்வனவு செய்த நபர்களுககு வீதி க்கோட்டுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள முடியாதிரந்தது.

(ஆ) கல்கஹமுலஹேன காணி கூறாக்கள் திட்டத்திலிருந்து 24.2 பேர் அகற்றப்பட்டிருந்தமையால் காணியின் அளவு 0.978 ஹெக்டேயர் ஆக இருந்தமையால் பொது வசதிகளுக்கு சபைக்கு கிடைக்க வேண்டிய 35.42 பேர்ச் அளவு இழக்கப்பட்டிருந்தது.

(இ) தல்கஹமுலஹேன காணிகூறுகள் திட்டத்தை அங்கீகரிக்கும் போது நீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளத மற்றும் வீதிகள் நிர்ணயிக்கப்பட்ட அகலத்துடன் காணப்படுகின்றதா என பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 01 ஏக்கர் 01 ரூட் 33 பேர்ச் அளவான தலுபொத்த கட்டிடத்தின் தோட்டத்தின் விற்பனை பெறுமதி அடிப்படையில் சபைக்கு விற்பனை வரி பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக வெவ்வேறு மதிப்பீட்டு விலை அடிப்படையில் அப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதனிக்கப்பட்டன.

(அ) மதியுரை பொறியியல் படிகள் கொடுப்பனவு கணக்கீடு செய்யும் போது நிர்வாகச் செலவினம், மின்சாரச் செலவினம், மதியுரைச் செலவினம் வரி மற்றும் எதிர்பாராதவை என்பவற்றறிக்கு ரூபா 3,923,447 கருத்திற் கொள்ளப்பட்டு ரூபா 108,852 ஆன மதியுரைக கட்டணங்கள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) GC - 4267 ஆம் இலக்க டிபர் வண்டி 2014 ஆம் ஆண்டின் போது பெறுகை செயற்பாடு மற்றும் சுற்றறிக்கை மதியுரையிலிருந்து விலகி திருத்தவேலைகளுக்காக தனியார் கராஜ் ஒன்றுக்கு வழங்கப்பட்டு 2017 ஏப்ரல் 06 ஆந் திகதி ரூபா 2,064,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய திருத்த வேலைகளுக்காக 03 ஆண்டுகள் எடுக்கப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த செயற்பாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதனிக்கப்பட்டன.

(அ) ரூபா 510,874 மதிப்பீட்டிலான ஹல்மில்லவ உடற்பயிற்சி நிலையக் கட்டிடத்தின் நிர்மாணம் 2016 செப்தம்பர் 09 ஆந் திகதி பரீட்சித்த போது பயன்படுத்தப்பிடிருந்த பிளொக் கற்கள் நியம தரத்தில் இல்லாமல் வடிவம் என்பன பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் பீம் ஒன்றில் 04 அடி அளவிலான பகுதியொன்று வளைந்து கொங்கிரீட் வெடித்து இருந்தமையால் சுவருடன் தொடர்புறும் இடங்களில்

கம்பிகள் வெளியே காணப்பட்டது. இதன் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் நிலைத்திருதன்மை நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) ரூபா 5,153,415 பெறுமதியான பிங்கிரிய பஸ் நிறுத்துமிட கீழ் மாடியின் நிர்மாணச் செயற்திட்டத்திற்காக கூறுவிலை கோருவதற்காக தகைமை பெற்றுக்கொள்ளாத இரண்டு ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

**3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பிங்கிரிய பிரதேச சபையினால் மாதாந்தம் சேகரிக்கப்படும் 170 தொன் கழிவுப்பொருட்களில் 45 தொன் மாத்திரம் பசளை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுவதுடன் எஞ்சிய மீள்சுழற்சிப்படுத்தப்படக்கூடிய கடதாசி, பொலித்தீன் மற்றும் கண்ணாடி போன்ற ஏனையவற்றைக் கொண்டிருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது 13,230 கி.கிராம் பசளை உற்பததி செய்யப்பட்டிருந்ததுடுன் அதில் 12,080 கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டு ரூபா 96,640 உழைக்கப்பட்டிருந்தது.

**04 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதனிக்கப்பட்டன.

(அ) 10 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடுகளில் 48 சவீதம் முதல் 100 சதவீதம் வரையான சேமிப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) பொது மக்கள் வேண்டுகோள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட 44 செயற்திட்டங்களில் ரூபா 240,000 தொகையான 24 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேறப்பட்டிருக்கவில்லை

(இ) மருத்துவு உதவிக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 300,000 தொகையில் ரூபா 290,000 சேமிக்கப்பட்டிருந்தமையால் அதில் ரூபா 250,000 வேறு செலவின விடயமொன்றுக்கு மாற்றப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்குரிய நிதிஏற்பாடு நோக்கத்திற்குட்பட்ட செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) கணக்கீடு | i | மீதிகள் பதிவழித்தல் மற்றும் சீராக்குவதற்கு நிச்சயிக்கப்பட்ட காரணங்களுடன் வேறாக இனங்காணப்படாமை. |
| | ii | விசேட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்படாமை (காசு அடிப்படை) |
| | iii. | பட்டோலைகள் மூலம் உறுதிப்படுத்தப்படாமை (வருமான கடன்பட்டோர் பகுதி) |

| | | |
|---|---|---|
| (ஆ) | வீடுகள் ஆதனங்கள் அபிவிருத்தி செய்து விற்பனை செய்தல் | துணை விதியின் பிரகாரம் நீர் வசதிகள், மின் வசதிகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமை |
| (இ) | வருமானம் | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | சேதனப் பசளை கேள்வியை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |